www.padippakam.com

# இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனே மனைவியுடன் சென்னை வந்தார்

## விமான நிலையத்தில் எம்.ஜி. ஆர். வரவேற்பு

சென்னை, அக். 27— இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனே, சென்னை வந்தார். முதல் — அமைச்சர் எம்.ஜி.ஆர், விமான நிலையத்தில் அவரை வரவேற்றார்.

### இலங்கை ஜனாதிபதி

இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனே இந்தியாவில்2வாரம் சுற்றுப்பயணம் செய்வதற்காக நேற்று மனைவியுடன், இலங்கையில் இருந்து விமானத்தில் புறப்பட்டார்.

மாலை 5-10 மணிக்கு அவர் விமானம், சென்னை விமான நிலையத்தில் வந்து இறங்கியது.

### எம். ஜி. ஆர்.

விமான நிலையத்தில் அவரை முதல்–அமைச்சர் எம். ஜி.ஆர், மாலை அணிவித்து வரவேற்றார். நிதி அமைச்சர் நாஞ்சில் மனோகரன், மின்சாரத் துறை அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரன் ஆகியோரும் ஜனாதிபதி ஜெயவர்த்தனேவுக்கு மாலை அணிவித்தார்கள்.

மற்றும் தலைமைச் செயலாளர் கார்த்திகேயன், போலீஸ் கமிஷனர் பொன். பரமகுரு, இலங்கைக்கான இந்திய தூதர் தாமஸ் ஆப்ரகாம், சென்னையில் உள்ள இலங்கை தூதர் கவுதம தாசா ஆகியோரும்அவரை வரவேற்பதற்காக விமான நிலையத்துக்கு வந்திருந்தார்கள்.

### கவர்னர் மாளிகை

விமானத்தில் இருந்து இறங்கியதும் ஜனாதிபதி ஜெயவர்த்தனேவும், அவரது மனைவியும் காரில் கிண்டியில் உள்ள கவர்னர் மாளிகைக்குச் சென்றார்கள். இன்று (வெள்ளிக்கிழமை) காலை அவர்கள் புதுடெல்லிக்கு விமானத்தில் செல்கிறார்கள்.

தினத்தந்தி 27-10-78

## வாலிபர் கைது

### ஜெயவர்த்தனே முன் ஆர்ப்பாட்டம்

சென்னை, அக். 27— இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனே நேற்று சென்னை விமான நிலையத்தில் இருந்து கவர்னர் மாளிகைக்கு சென்றபோது, விமான நிலையத்துக்கு வெளியே ஒரு வாலிபர் இலங்கை அரசுக்கு எதிராக குரல் எழுப்பினார்.

இலங்கை தமிழர்களின் போராட்டத்தை ஆதரித்தும், இலங்கை அரசின் போக்கை கண்டித்தும் அச்சடித்த நோட்டீசுகளை அவர் வீசினார்.

அவரை போலீசார் கைது செய்தனர்.

கைதானவரின் பெயர் சேலம் பாவரசு என்றும், விசாரணையில் தெரிய வந்தது.

## சென்னையில் ஸ்ரீலங்கா அதிபர்

சென்னை. அக். 26—இந்தியாவில் 15 நாள் விஜயம் மேற்கொண்டுள்ள ஸ்ரீலங்கா அதிபர் ஜயவர்த்தனே, தமதுமனைவியுடன் இன்று விசேஷ இந்தியன் ஏர்லைன்ஸ் விமானத்தில் சென்னைக்கு வந்து சேர்ந்தார்.

முதலமைச்சர் எம். ஜி. ராமச்சந்திரன், நிதியமைச்சர் மனோகரன், எஸ். ராமச்சந்திரன், அரசு தலைமைச் செயலர் கார்த்திகேயன் ஆகியோர் விமான நிலையத்தில் அவர்களை வரவேற்றனர்.

ஸ்ரீலங்கா அதிபராகப் பதவியேற்றபின் ஜயவர்த்தனே இந்தியாவுக்கு விஜயம் செய்வது இதுதான் முதல் தடவை.

ஜயவர்த்தனே இரவு ராஜ்பவனில் தங்கிவிட்டு நாளை (வெள்ளி) காலை டில்லிக்குப் பயணமாவார்.

டில்லியில் 3 நாள் தங்கி ராஷ்டிரபதி சஞ்சீவரெட்டி, பிரதமர் தேசாய் ஆகியோருடனும் மற்ற மந்திரிகளுடனும் பரஸ்பரம் அக்கறையுள்ள விஷயங்கள்பற்றி விவாதித்துவிட்டு, நாட்டில் பல்வேறு இடங்களிலுள்ள பௌத்த மத புனித ஸ்தலங்களுக்குச் செல்வார்.

### இருவர் கைது

ஸ்ரீலங்கா ஜனாதிபதி வருகையையொட்டி முன் எச்சரிக்கையாக அனைத்துலக தமிழர் அமைப்பைச் சேர்ந்த தமிழ் மன்னன், செல்வராஜ் ஆகிய இருவரையும் தடுப்பு நடவடிக்கையாகப் போலீசார் கைது செய்துள்ளனர்.

EROS MADRAS

## President Jayewardene in City

Express 27-10-78

By Our Staff Reporter

Sri Lanka President Junius Richard Jayewardene, accompanied by Mrs. Jayewardene, arrived in Madras on Thursday evening by a special Indian Airlines plane on a 15-day State visit to India. He is leaving for Delhi on Friday morning.

Mr. Jayewardene, who is visiting the country for the first time after he assumed office, was received at the Meenambakkam airport by Chief Minister M. G. Ramachandran, Finance Minister K. Manoharan and Electricity Minister S. Ramachandran.

Mr. Thomas Abraham, Indian High Commissioner to Sri Lanka, Mr. V. Karthikeyan, Chief Secretary to Tamil Nadu Government, and Mr. Gautama Dasa, Sri Lanka Deputy High Commissioner in Madras, and officials and members of the diplomatic corps were among others present. Mr. Jayewardene later left for the Raj Bhavan.

Energy Minister P. Ramachandran will be the Minister-in-waiting for Mr. Jayewardene during his stay in Delhi, says a New Delhi report.

## இலங்கை மந்திரியை கொல்ல சதி!

### 4 பேர் கைது!!

கொழும்பு, அக். 27— இலங்கையில் கொழும்பு மாவட்ட மந்திரி வீரசிங்கமல்லிமாராச்சியை கொல்ல நடந்த சதி திட்டத்தை போலீசார் முறியடித்தனர். இது தொடர்பாக 4 பேர் கைதாகி உள்ளனர்.

43 வயதான வீரசிங்க,ஆளும் ஐக்கிய தேசிய கட்சியை சேர்ந்தவர். கொழும்பு தொகுதியில் இருந்து கடந்த ஆண்டுதேர்தலில் தேர்ந்து எடுக்கப்பட்டவர். முன்னாள் பிரதமர் திருமதி பண்டார நாயக்கின் சுதந்திரா கட்சி முக்கிய வேட்பாளரை இவர் தோற்கடித்தார்.

குண்டர்களை தூண்டி விட்டு, அவரை கொலை செய்ய முயற்சி

படிப்பகம்